மட்டுமல்ல; வாயில்லா ஜீவன்களையும் காக்கக்கூடியவர்தான் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலே மருத்துவமனை அமைக்க முடியுமா என்று மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்களின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

114—

ஊதிய உயர்வு

***20292—திரு. என்.எஸ்.என். நடராஜ்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கைத்தறித் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது சம்பந்தமாக வினா எழுப்பியுள்ளார். கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்விதமாக, அனைத்து கைத்தறி நெசவாளர்களுக்கும், ஏற்கெனவே அவர்கள் பெறும் அடிப்படைக் கூலியில், 2011 ஆம் ஆண்டு 10 சதவிகிதம் உயர்வும், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளிலே, தலா 10, 10 சதவிகிதம் உயர்வும் வழங்கப்பட்டது. அதைப்போலவே, ஏற்கெனவே அடிப்படைக் கூலியுடன் வழங்கப்பட்டு வந்த 105 சதவிகித அகவிலைப் படி 2014 ஆம்

ஆண்டு 10 சதவிகிதம் உயர்த்தப்பட்டு, 105 சதவிகிதத்திற்குக் கூடுதலாக, 115 சதவிகிதம் அகவிலைப் படி கடந்த 1-11-2011 முதல் வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலமாக, 1,164 கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள நெசவாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

திரு. என்.எஸ்.என். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி மக்கள் முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். ** (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யாரையும் குறிப்பிடாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) திரு. என்.எஸ்.என். நடராஜ், யாரையும் குறிப்பிடாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிடாமல் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 10-55

திரு. என்.எஸ்.என். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சம்பள உயர்வு மற்றும் அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் செய்து கொடுத்து நெசவாளர்களுக்கு நல்ல திட்டத்தைக் கொடுத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்கள் இதயத்தில் இருக்கும் மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் கைத்தறித் தொழிலாளர்களுக்கு மீண்டும் ஊதிய உயர்வு வழங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அரசும் மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆவன செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2015 ஏப்ரல் 1

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் கைத்தறித் துறையிலுள்ள திட்டங்களிலே முதன்முதலாகக் கைத்தறி நெசவாளர்களுக்கென்று 1-11-2014 முதல் பாவு சுற்றுதல், பசை போடுதல் மற்றும் தார் சுற்றுதல் போன்ற நெசவுக்கு முந்தைய பணிகளுக்காக அவர்கள் பெற்றுவரும் கூலியிலே தனியாக 20 சதவீதம் அளவிற்கு நெசவுக்கு முந்தைய கூலி வழங்கப்பட்டது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். இதன் மூலமாக பட்டு கைத்தறி நெசவாளர்கள் ஓர் உருப்படிக்கு சுமார் ரூ.200/- முதல் ரூ.322/- வரை கூலி உயர்வும், பருத்தி கைத்தறி நெசவாளர்கள் ரூ.15/- முதல் ரூ.70/- வரை கூலி உயர்வும் தனியாக அவர்கள் பெற்று வருகின்றார்கள். இந்த ஆண்டு அவர்களுக்கு அகவிலைப் படி 10 சதவீதம் உயர்த்திக் கொடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த ஆண்டு எந்த வகையிலே அவர்களுக்குக் கூலி உயர்வு வழங்கலாம் என்பதை ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகில் வந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தப் பிரச்சினை முடிந்துவிட்டது. (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிட வேண்டாமென்று சொல்லிவிட்டேன். அவர் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) அவர் யாருடைய பெயரையும் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) பெயரைக் குறிப்பிடாமல் கேள்வி கேளுங்கள் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் முடியாது. (குறுக்கீடுகள்) அதெல்லாம் செய்ய முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அனைவரும் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் நடந்துகொள்வது நியாயமா? (குறுக்கீடுகள்) நீங்கள் நடந்துகொள்வது நியாயமா? (குறுக்கீடுகள்)

2015 ஏப்ரல் 1]

உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) இதுபோன்று நடந்துகொண்டால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடுகள்) நீங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுத்தான் சொல்ல முடியும். (குறுக்கீடுகள்) இல்லை. நான் அவைக் குறிப்பைப் பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிட வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) யாருடைய பெயரையும் குறிப்பிட வேண்டாம் என்று திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டேன். (குறுக்கீடுகள்) நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, அப்படி பெயர் இடம்பெற்றிருந்தால் எடுத்துவிடுகிறேன். (குறுக்கீடுகள்) இது முறையல்ல. (குறுக்கீடுகள்) நீங்கள் பேரவைத் தலைவரை அப்படியெல்லாம் நிர்ப்பந்திக்க முடியாது. (குறுக்கீடுகள்) பேரவைத் தலைவரை நீங்கள் அப்படியெல்லாம் நிர்ப்பந்தப்படுத்த முடியாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள்

(முற்பகல் 11-00

பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

115—

விளையாட்டு அரங்கம்

***29278—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—